# பிரசவ-வலி ஏற்படும் பொழுது மருத்துவமனைக்கு எப்போது வரவேண்டும்

## When to Come to Hospital in Labour

Tamil July 2022

வீட்டிலிருந்து புறப்படுவதற்கு முன்பாக 'பிரசவ சேவை' (Birthing Service), அல்லது உங்களுடைய மருத்துவச்சியுடன் தொடர்புகொள்ளுங்கள். நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை மருத்துவச்சி உங்களுக்குச் சொல்வதோடு, உங்களுக்கு கேள்விகள் ஏதுமிருப்பின் அவற்றிற்கும் அவர் பதிலளிப்பார்.

## உங்களுடைய முதல் குழந்தையின் பிறப்பை நீங்கள் எதிர்பார்த்திருந்தால்

உங்களுடைய பிரசவத் திகதி நெருக்கமாக இருந்தால் (37 வாரங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம்), நீங்கள் மருத்துவமனைக்கு வரவேண்டும்:

- தொடர்ந்த, மற்றும் அதிகரித்துக்கொண்டிருக்கும், இடைவெளி குறைந்த, மற்றும் துவக்கத்திலிருந்து முடிவு வரை 60 வினாடிகளுக்கு மேல் நீடிக்கும் பிரசவ-வலி உங்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருந்தால். இப்படிப்பட்ட சுருக்க-விரிவுகள் குறைந்தபட்சமாக ஒரு மணி நேரத்திற்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கவேண்டும். பெரும்பான்மையான பெண்களுக்குப் பிரசவ வலிகளுக்கு இடையே மூன்று முதல் ஐந்து நிமிடங்கள் வரைக்குமான இடைவெளி இருக்கும்.

## அல்லது

- உங்களுடைய 'பனிக் குடம்' உடையும்பொழுது. அதாவது, குழந்தையைச் சுற்றியுள்ள பை-யில் உள்ள நீர் உடைபடும் பொழுது. இந்த நீர் மெதுவாகக் கசியலாம், அல்லது திடீர்ப் பாய்ச்சலாக வெளிவரலாம். உங்களுடைய பனிக்குடம் உடையும் பொழுது 'சானிடரி' திண்டு ஒன்றை வைத்துக்கொள்வது நல்லதொரு யோசனையகும். நீங்கள் மருத்துவமனைக்கு வரும்பொழுது உங்களுடைய மருத்துவச்சி அந்த நீரின் நிறத்தையும், மணத்தையும் சோதிப்பார்.

## அல்லது

- பிரகாசமான சிவப்பு நிற இரத்தப்போக்கு உங்களுக்கு இருந்தால்.

இது உங்களுடைய முதல் பிரசவமாக இருந்தால், மற்றும் உங்களுடைய கர்ப்பகாலம் 37 வாரங்களுக்குக் குறைவான காலமாக இருந்தால், பிரசவ-வலிகள், உடைந்த பனிக் குடம் அல்லது இரத்தப்போக்கு போன்ற பிரசவ அறிகுறிகள் உங்களுக்கு இருந்தால், நீங்கள் மருத்துவமனையுடன் தொடர்புகொள்ளவேண்டும்.

## ஏற்கனவே நீங்கள் பிரசவித்திருந்தால்

உங்களுடைய பிரசவ-வலியின் சுருக்க விரிவுகளுக்கு இடையேயான நேரம் ஐந்து முதல் ஏழு நிமிடங்கள் வரை இருந்தால் நீங்கள் மருத்துவமனைக்கு வர வேண்டும் என்பதைத் தவிர, மேலேயுள்ள அறிவுரைகளை நீங்கள் பின்பற்றவேண்டும்.



மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவுசெய்து 'மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை' (Translating and Interpreting Service (TIS))-யை 131 450-இல் அழையுங்கள்.

## ஆங்கிலம் பேசுவதில் எனக்கு உதவி தேவைப்பட்டால் என்ன செய்வது?

ஆங்கிலத்தை விளங்கிக்கொள்வதில் அல்லது பேசுவதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தொழில்-ரீதியான மொழிபெயர்த்துரைப்பாளர்கள் கிடைப்பார்கள். உங்களுடன் ஒரு குடும்ப அங்கத்தவர் அல்லது நண்பர் இருக்கலாம், ஆயினும் உங்களுடைய பராமரிப்பைப் பற்றிய அனைத்துத் தொடர்பாடல்களும் தொழில்-ரீதியான மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் மூலமாகவே கொள்ளப்படவேண்டும். **மொழிபெயர்த்துரைப்பு சேவைகள் இலவசமானவை மற்றும் அந்தரங்கமானவை.**

மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குக் கொடுக்கப்படவில்லையேல், ஒருவர் வேண்டுமெனக் கேட்பதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. பணியாளர்கள் உங்களுக்காக மொழிபெயர்த்துரைப்பாளரை முன்பதிவு செய்வார்கள்.

எம்முடன் தொடர்புகொள்ள மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை நீங்கள் பயன்படுத்தவேண்டுமெனில், தயவு செய்து 131 450-இல் ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பு சேவையை’ (TIS) அழையுங்கள்.

### Local Contact (உள்ளூர்த் தொடர்பு விபரம்)

Person’s name (பெயர்): ______________________

Contact number (தொலைபேசி இலக்கம்): ______________________


Child, Youth & Family Services
301 Forbes Street, Darlinghurst, NSW 2010

Produced by South Eastern Sydney Local Health District
Translations funded by the Multicultural Health Service

மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவுசெய்து ‘மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை’ (Translating and Interpreting Service (TIS))-யை 131 450-இல் அழையுங்கள்.